**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 24.04.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

தீவிரவாதிகளையும், அவர்களுக்கு பின்னால் உள்ளவர்களையும், இந்தியா அடையாளம் கண்டு, தேடிப் பிடித்து, கடுமையாக தண்டிக்கும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சரும், வெளியுறவு அமைச்சரும், இன்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து, பகல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து எடுத்துக் கூறினர்.

நிலவரங்கள் குறித்து, மத்திய அரசு இன்று மாலை புதுடெல்லியில், அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றையும் நடத்துகிறது.

புதுச்சேரியில், ஒருங்கிணைந்த பொலிவுறு பேருந்து நிலையத்தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---------------------------

*மோடி-பீகார்* 1 (13)

தீவிரவாதிகளையும், அவர்களுக்கு பின்னால் உள்ளவர்களையும், இந்தியா அடையாளம் கண்டு, தேடிப் பிடித்து, கடுமையாக தண்டிக்கும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். பீகார் மாநிலம் மதுபனி மாவட்டத்தில், இன்று, தேசிய பஞ்சாயத்து ராஜ் தினவிழாவில் உரையாற்றிய அவர், தீவிரவாதிகளின் கொடுஞ்செயல், இந்தியாவின் ஆன்மாவிற்கு எதிரான தாக்குதல் என்றும், தீவிரவாதிகள் உலகின் ஓரத்திற்கே ஓடினாலும், இந்தியா விடாது என்றும், கூறினார். நாட்டின் முன்னேற்ற உணர்வுகள், தீவிரவாதத்தால் முறியாது என்றும், 140 கோடி

இந்தியர்களின் ஒட்டுமொத்த மன உறுதி மூலம், தீவிரவாதம் முற்றிலுமாக வேரறுக்கப்படும் என்றும், பிரதமர் கூறினார். மனித குலத்தின் மீது நம்பிக்கை உள்ள அனைவரும், இந்தியாவின் பக்கமே நிற்பதாக அவர் குறிப்பிட்டு, இந்தியாவிற்கு ஆதரவு வெளியிட்டுள்ள உலகத் தலைவர்கள் அனைவருக்கும், நன்றி தெரிவித்துக் கொண்டார். விழா குறித்து கூடுதல் விவரங்கள்…..

**(வாய்ஸ்)**

*மோடி-பீகார்* 2 (17)

**(வாய்ஸ்)**

தேசிய பஞ்சாயத்து ராஜ் தின விழாவில் பேசத் தொடங்கும் முன்பாக, பிரதமர் சிறிது நேரம் மவுனம் அனுசரித்து, பகல்காம் தீவிரவாத தாக்குதலில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

விழாவின் போது, மொத்தம் 13 ஆயிரத்து 480 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். சாலை மற்றும் ரயில்வே கட்டமைப்புத் திட்டங்களும், வீட்டு வசதி உள்ளிட்ட திட்டங்களும் இதில் அடங்கும். பீகார் மாநிலத்திற்கான 4 புதிய ரயில்களையும், காணொலிக் காட்சி மூலம், பிரதமர் கொடியசைத்து தொடக்கி வைத்தார். ஜெயநகர்-பாட்னா நமோ பாரத் துரித ரயில், சஹர்சா-மும்பை அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

புதுமையான முயற்சிகள் மூலம், உள்ளூர் அளவில் சிறப்பாக செயல்பட்ட, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பஞ்சாயத்து ராஜ் பிரதிநிதிகளுக்கு, பிரதமர் விருதுகளை வழங்கி கவுரவித்தார். மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், பீகார் ஆளுநர் திரு. ஆரீஃப் முகமது கான், முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் உட்பட பலர், தேசிய பஞ்சாயத்து ராஜ் தினவிழாவில் கலந்து கொண்டனர்.

---------------------------

*அமித் ஷா* (11)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஆகியோர், இன்று பிற்பகல் குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் தீருமதி திரௌபதி முர்முவை சந்தித்து, பகல்காம் தீவிர வாத தாக்குதல் குறித்தும், பாகிஸ்தானுக்கு எதிராக தூதரக ரீதியில் இந்தியா மேற்கொண்டுள்ள வலுவான நடவடிக்கைகள் குறித்து எடுத்துக் கூறினர். மத்திய வெளியுறவு அமைச்சகம், இன்று, ஜெர்மன், ஜப்பான், இங்கிலாந்து, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் தூதர்களிடம், இதே விவரங்களை எடுத்துக் கூறியது. தீவிரவாதத தாக்குதல் மற்றும், அரசின் நடடிவக்கைகள் பற்றிய விவரங்களை அரசியல் கட்சித் தலைவர்களுக்கு எடுத்துக் கூறும் வகையில், இன்று மாலை புதுடெல்லியில், அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றையும், மத்திய அரசு நடத்துகிறது.

---------------------------

*காஷ்மீர் மோதல்* (7)

ஜம்மு-காஷ்மீரின் உத்தம்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட, தூடூ-பசந்த்கார் எல்லைப் பகுதியில், இன்று பாதுகாப்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது, தீவிரவாதிகள் மறைந்து இருந்து தாக்கியதில், ராணுவ ஜவான் ஒருவர் உயிரிழந்தார். தேடுதல் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தெற்கு காஷ்மீரின் குல்காம் மாவட்டத்திற்கு உட்பட்ட தங்மார்க் வனப் பகுதியிலும், கூட்டுப் பாதுகாப்புப் படையினரின் தேடுதல் பணிகள் தொடர்கின்றன.

---------------------------

*சத்தீஸ்கர்-மாவோயிஸ்ட்* (7)

சத்தீஸ்கர் மாநிலத்தில் தெலங்கானா உடனான எல்லையை ஒட்டியுள்ள, கர்ரேகட்டா மலைப் பகுதியில், இன்று மாவோயிஸ்டுகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், 3 மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மத்திய ரிசர்வ போலீஸ் படையின் ஒருங்கிணைப்புடன், சத்தீஸ்கர்,

தெலங்கானா மற்றும், மஹாராஷ்டிர கூட்டுப் படையினர் மேற்கொண்டு வரும்  தேடுதல் வேட்டையின் போது, இந்த மோதல் ஏற்பட்டது.

---------------------------

*காங்கிரஸ் தீவிரவாதம்* (12)

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில், பகல்காம் தீவிரவாத தர்கசுதலுக்கு, வலுவாக கண்டனம் தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் அரசால் இயக்கப்படும் தீவிரவாதிகளின் கோழைத் தனமான இந்த தாக்குதல், இந்தியாவின் ஜனநாயக மாண்புகளுக்கு எதிரானது என்று, காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் திரு. வேணுகோபால் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். ஜம்மு-காஷ்மீரில், அமர்நாத் யாத்திரையும் விரைவில் தொடங்கும் நிலையில், பயணிகளின் பாதுகாப்பை தேசிய முன்னுரிமையாக எடுத்துக் கொள்ளுதல் அவசியம் என்றும், காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.  கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மற்றும், திருமதி சோனியா காந்தி, திரு. ராகுல் காந்தி உள்ளிட்ட மூத்த தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

---------------------------

*பிஜேபி போராட்டம்* (7)

பகல்காம் தீவிரவாத தாக்குதலை கண்டித்து, இன்று டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் முன்பாக, பிஜேபி தலைவர்கள், மற்றும், தொண்டர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.  சம்பவம் குறித்து, இந்திய மக்களின் மனங்களில் கோபம் மூண்டுள்ளதாக, பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்  திரு. சதீஷ் உபாத்யாய், செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.  இந்திய அரசும், ராணுவமும், பாகிஸ்தானுக்கு சரியான பதிலடி கொடுக்கும் என அவர் தெரிவித்தார்.

---------------------------

*புதுச்சேரி பேருந்து நிலையம்* (8)

புதுச்சேரியில், ஸ்மார்ட் நகரத் திட்டத்தின் கீழ், 33கோடி ரூபாய் செலவில், ஒருங்கிணைந்த பொலிவுறு பேருந்து நிலையமாக

புனரமைக்கப் பட்டுள்ள மறைமலையடிகள் சாலை பேருந்து நிலையத்தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். சில திருத்தங்களை மேற்கொண்டு, பேருந்து நிலையத்தை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர, அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். வரும் 30ஆம் தேதி, அல்ல, மே 4ஆம் தேதி, பேருந்து நிலையம் திறக்கப்படும் என்றும் அவர் கூறினார். முதலமைச்சரின் ஆய்வு குறித்து கூடுதல் விவரங்கள்......

**(வாய்ஸ்)**

---------------------------

*ரங்கசாமி-மீன்பிடி வலை* (13)

புதுச்சேரியில், தேங்காய்திட்டு மீன்பிடி துறைமுகத்தில், மீன்வளத் துறை சார்பில் இன்று மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கலந்து கொண்டு, மத்திய நிதி உதவித் திட்டத்தின் கீழ், மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களுக்கு, 60 சதவிகித மானியத்துடன் கூடிய, மீன்பிடி வலை மற்றும், கயிறுகளை வழங்கினார். மொத்தம் 24.5 லட்சம் ரூபாய் செலவில், 49 படகு உரிமையாளர்களுக்கு, தலா 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில், மீன்பிடி வலை மற்றும் கயிறு வழங்கப்பட்டது. இதுவரை, கயிறு மட்டுமே வழங்கப்பட்டு வந்த விசைப் படகுகளுக்கும், இம்முறை மீன்பிடி வலை வழங்கப்பட்டுள்ளது. மீனவர்களின் குழந்தைகளுக்கு, கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டமும், விரைவில் செயல்படுத்தப்படும் என முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். சட்டபட பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப்பணி மற்றம் மீன் வளத்துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் மற்றும் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

---------------------------

*புதுச்சேரி சட்டத் துறை* (7)

புதுச்சேரி அரசின் சட்டத் துறையில், ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ள, 2 ஆலோசகர் பணியிடங்களுக்கு, அரசுத் துறைகளில், நிர்வாக நடைமுறைகள், கணக்கியல் விதிமுறைகள், மற்றும், திட்ட அமலாக்கம் தொடர்பான அனுபவத்துடன், குறைந்தபட்சம்

உதவியாளராக பணி புரிந்து, ஓய்வு பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம் என, அரசு அறிவித்துள்ளது. நீட்டிக்கப்பட்ட தேதியான மே 6ஆம் தேதிக்குள், உரிய முறையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*கடலோரக் காவல்* (10)

காரைக்கால் அருகே, இந்திய கடற்பரப்பில், ஆண்டுதோறும் கடலோரக் காவல் படையினர் மேற்கொள்ளும் ஒத்திகை நிகழ்ச்சியின் ஒருபகுதியாக, பயணிகள் படகு விபத்திற்குள்ளானால், பயணிகளை மீட்பது எப்படி என்பது குறித்து, நடுக்கடலில், செயல் விளக்கம்செய்து காட்டப்பட்டது. காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. சோம சேகர அப்பாராவ், நாகை மாவட்ட ஆட்சியர் திரு. ஆகாஷ் உள்ளிட்ட உயர்நிலை அதிகாரிகள், கடலோர காவல் படைக்கு சொந்தமான, சவ்ரியா கப்பல் மூலம் கடலில் பயணம் மேற்கொண்டு, இலகு ரக ஹெலிகாப்படர் மூலம் பயணிகள் மீட்கப்பட்டு, முதலுதவிக்கு பின்னர், கப்பல் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்படும் நடைமுறைகளை பார்வையிட்டனர்.

---------------------------

*ஏனாம் முற்றுகை* (12)

ஏனாமில் குப்பை அகற்றும் பணிகள் முடங்கி இருப்பதால், சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக கூறியும், பிரச்சனைக்கு உடனடியாக தீர்வு காணக் கோரியும், ஏனாம் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள், இன்று புதுச்சேரியில், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஸ்ரீனிவாஸ் அசோக் தலைமையில், சட்டசபையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். முதலமைச்சர் திரு. ரங்கசாமியை இவர்கள் சந்தித்து முறையிட்ட போது, 2 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் உறுதி அளித்தார். தொடர்ந்து மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயத்தையும் இவர்கள் சந்தித்து முறையிட்டனர். சட்டமன்ற உறுப்பினர் திரு. கொல்லபள்ளி ஸ்ரீனிவாஸ் அசோக் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஏனாமில் ஏற்கனவே செயல்பட்டு

வந்த குப்பை கிடங்கு மூடப்பட்டதற்கு, அரசியல் காழ்ப்புணர்ச்சியே காரணம் என குற்றம் சாட்டினார்.

---------------------------

*ஐபிஎல்* (4)

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, பெங்களூரில் நடைபெறும் போட்டியில், பெங்களூர்-ராஜஸ்தான் அணிகள் மோத உள்ளன. ஹைதராபாத்தில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், மும்பை அணி, 7 விக்கெட் வித்தியாசத்தில், ஹைதராபாத் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

---------------------------

*வானிலை* (11)

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்கு திசைக் காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால், வரும் 30ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 26ஆம் தேதி வரை, அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவுதான் என்றும், 27-28 ஆகிய தேதிகளில், வெப்பநிலை சற்று குறையலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டை, குமரி மாவட்டம் கன்னிமார் ஆகிய இடங்களில், தலா 4 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------------

*தட்டம்மை* (14)

குழந்தைகளுக்கு ஏற்படும் தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோயை, 2026ஆம் ஆண்டிற்குள், முற்றிலும் ஒழிப்பதற்கான தேசிய இயக்கத்தை, உலக தடுப்பூசி வாரத்தின் முதல் நாளான இன்று புதுடெல்லியில், மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜே.பி நட்டா தொடக்கி வைத்தார்.

இவ்வாண்டு ஜனவரி முதல், மார்ச் மாதம் வரையிலான காலகட்டத்தில், நாட்டின் 322 மாவட்டங்களில், புதிதாக எவருக்கும் தட்டம்மை இருப்பதாக கண்டறியப்படவில்லை என்றும், 487மாவட்டங்களில், ரூபெல்லா நோய்த் தாக்குதல் இல்லை என்றும், அவர் தெரிவித்தார். தட்டம்மை-ரூபெல்லா தடுப்பூசி இயக்கத்தை, மக்கள் ப்ங்கேற்புடன் வெற்றிகரமாக நடத்துவது குறித்து, மாநில அமைச்சர்களும், தலைமை மருததுவ அதிகாரிகளும், மக்கள் சந்திப்பு மற்றும் செய்தியாளர் கூட்டங்களை நடத்த வேண்டும் என திரு ஜே.பி நட்டா கேட்டுக் கொண்டார். அனைத்து எம்.பி-ஒம்எல்ஏக்கள், மற்றும், உள்ளாட்சி பிரதிநிதிகள், இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

--------------------------

*விளையாட்டு சான்றிதழ்* (16)

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற, மற்றும், வெற்றி பெற்றவர்களுக்கு, டிஜி லாக்கர் மூலம் சான்றிதழ் வழங்கும் நடைமுறைகளை, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். விளையாட்டு வீரர்கள், உரிய சான்றிதழ் கிடைக்காமல் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை இழக்கும் நிலையை தவிர்க்க, இதனால் ஏதுவாகும் என்று அவர் கூறினார். 2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளையும், 2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளையும், இந்தியாவில் நடத்த வாய்ப்பு கிடைக்கும் என, அமைச்சர் நம்விக்கை வெளியிடார். ஒலிம்பிக் போட்டிக்கு தகுதியான விளையாட்டு வீரர்களை உருவாக்க, ஒவ்வொரு விளையாட்டிற்கும் தனி ஒலிம்பிக் மையம் அமைக்கப் படும் என்றும், விளையாட்டுக் கூட்டமைப்புகள், தனியார் துறையுடன் ஒருங்கிணைந்து, ஒலிம்பிக் இலக்கை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனறும் அவர் கேட்டுக் கொண்டார். அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது, விளையாட்டு, அறிவியல், மற்றும், ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தையும் திறந்து வைத்தார்.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தீவிரவாதிகளையும், அவர்களுக்கு பின்னால் உள்ளவர்களையும், இந்தியா அடையாளம் கண்டு, தேடிப் பிடித்து, கடுமையாக தண்டிக்கும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சரும், வெளியுறவு அமைச்சரும், இன்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து, பகல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து எடுத்துக் கூறினர்.

நிலவரங்கள் குறித்து, மத்திய அரசு இன்று மாலை புதுடெல்லியில், அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றையும் நடத்துகிறது.

புதுச்சேரியில், ஒருங்கிணைந்த பொலிவுறு பேருந்து நிலையத்தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.